7th May 1962]

SRI V. S. S. MANI : சைக்கிள் டயரா அல்லது மோட்டார் டயரா என்று விளக்க முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இரண்டு டயர்களும்தான்.

SRI J. MATHA GOWDER : தனியார் துறையிலே மற்றவர்கள் இப்பொழுது விண்ணப்பித்திருக்கக்கூடிய தொழிற்சாலை சென்னையில் என்றால் சென்னையிலோ அல்லது சென்னைக்கு அருகாமையிலோ என்று அவர்கள் குறிப்பிட்டு கேட்டிருக்கிறார்களா ? இப்பொழுது நமக்கு தேவையான டயர்கள் உற்பத்தி ஆகின்றன என்று கருதப்படுகிறதா அல்லது உற்பத்தி குறைவாக இருக்கிறதா ? உற்பத்தி குறைவு என்றால், மத்திய சர்க்காரிடம் சொல்லி மேலும் ஒரு தொழிற்சாலை அமைப்பதற்கு லைசென்ஸ் வழங்குவதற்கு கனம் அமைச்சர் அவர்கள் வற்புறுத்துவார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : பிளானிங் கமிஷனை பொறுத்த அளவிலே இப்பொழுது அவர்கள் தீர்மானித்திருக்கிற 37 லட்சம் டயர்கள் போதுமானது என்று நினைக்கிறார்கள். ராஜ்ய சர்க்கார் அது போதாது, இன்றைக்கு நம்முடைய டிரான்ஸ்போர்ட்டு வேகமாக விரிவடைந்து வருவதன் காரணமாக இதை இன்னும் விஸ்தரிக்க வேண்டும் என்று கருதுகிறார்கள். அவ்வாறு அவர்கள் மத்திய சர்க்காருக்கும் சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில்தான் புது லைசென்ஸுக்கு அப்ளிகேஷன் வந்ததைக்கூட ராஜ்ய சர்க்கார் சிபார்சு செய்து அனுப்பியிருக்கிறார்கள்.

Counterfeit notes (Printing)

* 42 *Q.*—SRI J. MATHA GOWDER : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை நகரில் பத்து ரூபாய் கள்ள நோட்டு தயாரித்திருப்பது சர்க்காருக்குத் தெரியுமா ;

(இ) இது விஷயமாய் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) The case is under investigation by the Police.

SRI J. MATHA GOWDER : எத்தனை பேர்கள் இதுவரையிலே 10 ரூபாய் கள்ள நோட்டு அச்சடித்ததற்காக அரெஸ்டு செய்யப்பட்டிருக்கிறார்கள் ? இதுபற்றி கோர்ட்டில் ஒருக்கால் கேஸ் இருக்கலாம். ஆனால் எத்தனை பேர்கள் பிடிபட்டிருக்கிறார்கள் ? எத்தனை ஆயிரம் ரூபாய் கள்ள நோட்டு அச்சடித்ததாக இதுவரையில் கண்டுபிடித்திருக்கிறார்கள் என்பது பற்றி சொல்ல முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது சம்பந்தமான கேஸைப் பொறுத்த அளவிலே போலீஸ் பரிசீலனையில் இருக்கிறது. ஆகையினால், இதற்கு மேலே விபரங்கள் கூறாமல் இருப்பது நலம்.

SRI K. A. MATHIALAGAN : எவ்வளவு 10 ரூபாய் கள்ள நோட்டு சர்குலேஷனில் இருக்கிறது என்பதை கணக்கிட்டு மந்திரி அவர்கள் விவரம் கூறமுடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM. அது எப்படி அரசாங்கத்திற்குத் தெரியும் ? சர்குலேஷனில் அரசாங்கம் அனுமதித்தால் தான், அதற்குக் கணக்கு கொடுக்க முடியும். அரசாங்கத்திற்கு தெரியாமல் இருக்கலாம்.

PULAVAR K. GOVINDAN : அரசாங்கம் மானுவாரியாக கரென்ஸி நோட்டுகள் அச்சடித்து அனுப்புவது தான் இப்படி தனியார்களுக்கு ஒரு ஊக்கம் கொடுக்கிறது என்பதை அரசாங்கம் அறிந்திருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த அரசாங்கம் மானுவாரியாக கரென்ஸி நோட்டு அச்சடிக்கிறது என்று சொல்லுவதினால் தவறுதலான அர்த்தம்கூட ஏற்படலாம். கனம் அங்கத்தினர் கூறுவது

"டெபிஸிட் பினன்ஸிங்". அது பெரிய பொருளாதார விஷயம். அதைப் பற்றி கனம் அங்கத்தினர் கூறுகிருர்கள் என்று நினைக்கிறேன். அதற்கும், கள்ள நோட்டு அச்சடிப்பதற்கும் சம்பந்தம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

Sri S. MUTHULINGAM : பத்து ரூபாய் கள்ள நோட்டு அச்சடித்தது தேர்தலுக்கு முன்பா அல்லது பிந்தியா என்பதை கனம் அமைச்சர் அவர்கள் சொல்ல முடியுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : போலீஸார் ஒருவர் குற்றம் செய்யாமல் இருக்கும்பொழுது கேஸ் போடுவதில்லை.

Sri K. R. SAMBANDAM : இம்மாதிரி அடிக்கடி கள்ள நோட்டுகள் தயார் செய்யப்படுவதால், அவர்களை பேரில் மிலிடரி கோர்ட்டு மார்ஷல் செய்வது போல், கடுமையான நடவடிக்கை எடுப்பதுபற்றி சர்க்கார் யோசிக்குமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : குற்றத்திற்கு தகுந்த தண்டனைகள் சட்டப்படி கொடுக்கப்படுகின்றன. தூக்கு தண்டனை விதிக்கப்படுகிற கொலை கேஸ் கூட நடந்துக்கொண்டுதான் இருக்கிறது.

Government Hospital (Kottagiri)

* 43 Q.—**Sri J. MATHA GOWDER :** கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நீலகிரி ஜில்லா கோத்தகிரி சர்க்கார் ஆஸ்பத்திரியில் எத்தனை படுக்கைகள் இருக்கின்றன ;

(இ) படுக்கைகளை அதிகரிக்கும் உத்தேசமுண்டா ? விவரமென்ன ?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM : (*a*) Sixteen, Sir.

(*b*) The question of increasing the bed strength of the hospital from 16 to 50 is under consideration.

Sri J. MATHA GOWDER: கோத்தகிரி ஆஸ்பத்திரிக்கு படுக்கைகள் எத்தனையோ ஆண்டுகள் காலமாக எல்லா அமைச்சர்களிடமும் விண்ணப்பம் கொடுத்திருக்கிருர்கள். எப்பொழுதும் பரிசீலனையில் இருக்கிறது என்று பதில் மாத்திரம் வந்துக்கொண்டிருக்கிறது. கோத்தகிரியில் தாலூகா ஹெட்குவார்டர்ஸ் ஆஸ்பத்திரியையும் விட பெரியதாக இருக்கக்கூடிய நிலையிலே, தொழிலாளர்கள் சுற்றியிருக்கிற காரணத்திஞல் அதிகமான நெருக்கடி ஏற்படுகிறது. 50 பெட், 60 பெட் போதாமல் 200 பெட் தேவையுள்ள அளவிலே அங்கு வியாதியஸ்தர்கள் இருப்பதன் காரணமாக, இதை கனம் அமைச்சர் அவர்கள் தனியாக பரிசீலனை செய்து, படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு சர்க்கார் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM : "பெட் ஸ்டெரெங்தை" அதிகரித்து போதுமான வசதி செய்வதற்காக வேண்டி. கட்டடத்தை "எக்ஸ்டெண்டு" செய்யவேண்டுமென்று "ப்ரபோஸல்" இருக்கிறது. "எக்ஸ்டென்ஷன்" ஆகி "அகாமடேஷன்" கிடைத்தவுடன் "பெட் ஸ்டெரெங்த்" அதிகப்படுத்தப்படும்.

Sri A. THANGAVELU: தலைவர் அவர்களே, திண்டிவனம் சர்க்கார் மருத்துவ மனையில் போதிய படுக்கை வசதி இல்லாததால் வியாதியஸ்தர்கள் திருப்பி அனுப்பப்படுகிருர்கள் என்பதை அரசாங்கம் அறியுமா ?

Mr. SPEAKER : The hon. Member may put a separate question.